அறிவினு னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VIII.] AUGUST, 1908—ஸு ஆகஸ்டுமீ. [இலக்கம் 3.

பத்திராதிபர் அபிப்பிராயம்.

1. இந்தியாவில் முக்கியமானதும் முதன்மையானதுமான தொழில் பயிர்த்தொழில். இதற்குப் பின்னிட்டுத்தான் மற்றெந்தத் தொழில்களையும் சொல்லவேண்டும். சாதாரணமாக நம் நாட்டில் பயிர்த்தொழிலுக்கே தொழில் என்றும், பண்ணையாட்களைத் தொழிலாளிகளென்றும் வழங்கிவருவதாலும் இத்தொழிலின் சிறப்பைக் காணலாம். இத்தொழிலுக்குக் கால்நடைகளே முக்கிய ஆதாரமா யிருக்கின்றனவென்பது யாவருமறிந்த விஷயம். அவைகளை நாம் தகுதியானபடி மேய்ப்பித்துக் காப்பாற்றி நிலத்தையும் பண்படுத்தி யுழுது சாகுபடிசெய்யின் அதனைவிடச் சிறந்த தொன்றுமில்லை. எந்த உயர்தர உத்தியோகப்பதவியும் அதற்கீடாகாது. இதற்கு இலக்காக நமது ஔவைப்பிராட்டியாரும் "தொழுதூண்சுவையினுழுதூணினிது" எனக் கூறியுள்ளதே சிறியோர் முதல் முதியவர் வரைக்கும் சாக்ஷி பகரும். இதனை நாம் அபிவிர்த்தி செய்து அதிகமும் கஷ்டப்படாது, உண்டு சுகித்து வாழவேண்டின், நாம் முற்கூறியபடி கால்நடைகளைக்கொண்டு செய்யவேண்டி யிருப்பதால், அவைகளிடத்தில் நாம் எவ்வளவு பக்ஷம் பாராட்டவேண்டும்? அவைகளை நமக்குச் சமானமாகவும் நம்மில் ஒன்றெனவும் கருதி நடத்தல் வேண்டுமல்லவா? கால்நடைகள் மற்ற மிருகங்களைவிடச் சிரேஷ்டமானவை. காமதேனுவின் அம்சத்திற் றோன்றியவை. இந்துக்களின் சாஸ்திரக் கோட்பாட்டின்படி பசுவின் உறுப்பு ஒவ்வொன்றிலும், தேவர்கள் வசிக்கின்றார்களென்று அதனைப் பூஜிப்பது வழக்கமாக விருக்கின்றது. சிலர் பசுக்களை யடிப்பதும், இம்சிப்பதும், உதவாதபட்சத்தில் அடிமாட்டுக்கு விற்றுவிடுவதும் இக்காலத்திய வழக்கமாக அனுஷ்டித்து வருகின்றார்கள். அந்தோ! இக்கொடுந்தொழில் பார்க்க அம்மம்ம நம்மனமோ சகிக்கவில்லை. அவைகளை அலற அலற அடிப்பவன்தான் எத்தகையினனோ? நாம் கூறும் சொல் புன்சொல்லாயினும் பெரியோர் கூறிய ஆதாரமொன்றைக் காட்டுகின்றோம். "அம்மா வென அலற ஆருயிரைக் கொன்றருந்தி, இம்மானிடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார், அம்மா வெனுஞ் சப்தம் கேட்டகன்ற மாதவர்க்கும், பொய்ம்மா நிரய மென்றூற் புசித்தவர்க்கென் சொல்லுவதே" என்றும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிரும் தொழும்" என்றும் கூறியிருப்பதை யறிந்து அவைகள்

நமக்குப் பிரயோஜனப்படுங் காலங்களில் அவைகளை எவ்விதம் காப்பாற்றினேமோ அதைவிட அதிகப் பிரியங்காட்டி அவற்றின் வயோதிககாலத்தில் பாதுகாக்கவேண்டும். நமக்குக் காலமெல்லாம் பாடுபட்டுழைத்துவந்த கால்நடைகளுக்குச் செய்த நன்றியை மறந்துவிடுவது தருமமாகாது. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்றார் நாயனர். சாதாரணமாகவே ஜீவவதை செய்வது கொடிதென்றால் நமக்காகக் கஷ்டப்பட்ட பிராணியைக் கொல்வதும், கொல்பவர்களுக்கு விற்றுவிடுவதும், கொன்றருந்துவதும் கொடிதிலும் கொடிதாகுமன்றோ? இந்தியா தேசத்தின் செழிப்பான நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பசுக்களைப் பூஜிக்கும் குணமும், பசுக்களையும் அவற்றின் கன்றுகளையும் மிகவும் பக்ஷத்துடன் வளர்க்கும் செயலும் பொருந்தியிருக்கின்றார்கள். அவர்கள் சென்னைப்பட்டினத்து இடையர்களைப்போலல்ல. சென்னையிலுள்ள இடையர்கட்குக் கன்றின்மேல் பிரியம் கிடையாது; அவைகளைக் காப்பாற்றுவதும் கிடையாது; தாயின் பாலை யருந்தச் செய்விப்பதும் கிடையாது. இவர்கள் பால் கறக்கு மிடங்களிலெல்லாம் பசுவின் கன்றை நடக்கச் சக்தியில்லாததால் நெட்டித்தள்ளிக்கொண்டும், இறந்த கன்றுகளை மாமிசம்போக்கி வைக்கோல் அடைத்து எடுத்துக்கொண்டும் திரிவதைப் பார்க்கலாம். இது பெரும் பாதகமாகும். பாஞ்சால நாட்டினின்றும் குடியேறியிருக்கும் ஜனங்கள் பசுக்களை மிகப் பக்தியுடன் பூஜித்தும் போஷித்தும் வருவதை யின்றும் காணலாம். அவர்கள் இவ்விதக் கொடுந்தொழில் செய்யார்கள்; ஒருவன் செய்யப் பார்க்கவும் மாட்டார்கள். கிழப் பசுவொன்று உதவியற்றிருந்ததை யெண்ணி அதனை வளர்த்தவன் அடிமாட்டுக்காக விற்பனை செய்ய ஓட்டிக்கொண்டு போகுங்கால் அது நெடுந்தூரம் சென்று வழியில் ஒரு விருட்சத்தின்கீழிருந்த தபசியினிடம் ஓடி அடைக்கலம் புகுந்தது. சொந்தக்காரன் எவ்வளவோ முயன்றும் பசு, தபசியை விடாது சுத்திக்கொண்டே சுற்றிவந்தது. இதனைப் பார்த்தார் பெரியவர். தபசி, பசுவின் சொந்தக்காரனை நோக்கி, இதனை எங்கு ஓட்டிச் செல்கின்றாயென, அம்மூடன் அடிமாட்டுக் கென்றான். பசுக்களின் மகிமையினை நன்கறிந்த தபசி அதன் விலையைக் கேட்டுப் பசுவைத் தன்னிடத்திலிருத்திக்கொண்டு இனியவன் இத்தகைய செய்கை செய்யாமற்படி வேண்டும் பொருளை நல்கி யனுப்பிவிட்டார். இவ்விருவருடைய செய்கையையும் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது. இந்த அறம் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு தருமத்தில் ஒன்றாகும். இதற்கு ''விலைகொடுத் துயிர் காத்தல்'' என்று சொல்லப்படும். பசுக்களின் மகிமையினையும் அவைகளிட மிருந்துண்டாகும் கோசலம், கோமயம் இவற்றின் பரிசுத்தத்தினையும் அறிவுடையார் உணர்வர்.

2. இத்தேசத்தில் முற்காலத்திலிருந்த ஜனசங்கியைப் பார்க்கிலும் இக்காலத்திய ஜனசங்கியை மிகவும் அதிகரித்திருப்பதால், அக்காலத்திலிருந்த ஜனங்கள் பசுக்களினிடம் எவ்வளவு விசுவாசம் வைத்திருந்தார்களோ, அதைப்பார்க்கிலும் விசேஷித்த விசுவாசத்தை இக்காலத்தவர்க ளனுசரிக்க வேண்டுமல்லவா? ஆதலால் யாவரும் பசுக்களிடம் அபிமானமுள்ளவர்களாகவு மிருத்தல்வேண்டும். சிலர் தங்கள் கால்நடைகட்குக் குறைவான மேய்ப்பும் அதிக துர்க்கந்தமுள்ள நீரையும் அளிப்பார்களேயன்றி, வயிறுநிறைய மேய்த்துச் சுத்தமான நீரைக் குடிப்பித்து வருவதில்லை. இதனாலன்றோ அவைகள் நாளுக்குநாள் பலவீனப்பட்டுச் சீக்கிரத்தி லிறக்கின்றன? ஆதலால் அவைகளை இவ்வாறு இம்சிக்கும் கொடிய பாதகத்துக் கேதுவான கெட்ட வழக்கங்களை அடியோடு நீக்கிவிடவேண்டும். இஃதன்றிக் கால்நடைகள் மேய்வதற்கென முன்னோர்களால் ஏற்படுத்தியிருக்கும் வெளிநிலங்களையும் ஏரியைச்சார்ந்த மேட்டு நிலங்களையும் குடியானவர்கள் பயிரிடப் பங்கிட்டுக்கொள்வது என்ன அநீதமான செய்கை! பசுக்களின் மேய்ப்புக்காக ஏற்பட்டிருக்கும் நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்பவர்கள் இப்படிச் செய்வதைப்பார்க்கிலும் ஜனங்கள் குடியேறாத நாடுகளுக்குக் குடியேறி விடுவதாவது அல்லது வேறு தொழில்களிற் பிரவேசித்து ஜீவிப்பதாவது தகுதியாகும். பயிரிடுபவர்கள் தங்களுக்கு வேண்டியவளவு எப்படி உணவுப் பொருள்களைச் சேகரித்து வைத்துக்கொள்கின்றார்களோ, அப்படியே

தங்கள் கால்நடைகளுக்கும் வேண்டிய நல்ல ஆகாரத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். கால்நடைகளின் சந்ததி அபி விருத்தி யடையவேண்டுமென்னும் விருப்ப முள்ள ஒவ்வொரு குடியானவனும் அவை கட்குக் குறைவற்ற ஆகாரமிட்டும், அவை கள் குளிர், வெயில், மழைகளினின்றுந் துன்பப்படாதிருக்கத் தகுந்த தொழுவங் களைக் கட்டியும், கோடைகாலத்தில் அடிக் கடிச் சுத்தமான தண்ணீரைக் குடிப்பித்தும், மற்றக்காலங்களில் நாளொன்றுக் கிரண்டு முறைக்குக் குறையாமல் குடிப்பிப்பதுமான ஒழுக்கங்களை அனுசரிப்பது அவர்களின் முக்கிய கடமையாகும். மாடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டிகள் நீடித்த நாளாகச் சுத்திசெய்யாமல் துர்க்கந்தமுடையவைகளா யிருந்தும் அத்தொட்டிகளிலேயே பின்னும் ஜலத்தைக் கொட்டி மாடுகளுக் குண்பிப் பதினாலும், அசுத்த ஜலமுள்ள சிறு குளங் குட்டைகளில் தண்ணீர் காட்டுவதினாலும் மாடுகளுக்கு வியாதிகளுண்டாகும். வருஷ முழுமையும் ஒரே அளவாய் மேய்ப்பு போடு வதற்காக, வைக்கோல் முதலானவைகளை விசேஷமாய் அகப்படும் காலத்திலேயே சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். எப் போதும் ஒரே அளவாய் ஆகாரமளிப்பதி னால், கால்நடைகளின் ஜீரண கோசங்கள் சரி யான நிலைமையிலிருந்து அவைகளுக்கு ரோ கங்க ளணுகவொட்டா. அவைகளின் மேய்ப் புக் குபயோகமான வைக்கோல் புல் முத லானவை அசுத்தமாயாவது சாரமற்றதா யாவதிருந்தால் அந்த மேய்ப்பினால் அவை களுக்கு நோயுண்டாகும்.

3. தனக்கும் தன் குடும்பத்துக்கும் போது மான தகுந்த ஆகாரத்தைச் சம்பாதிக்கத் திற மையில்லாத குடித்தனக்காரன், தன் கால் நடைகளைத் தக்கபடி பாதுகாத்து வருவா னென்பது நம்பத் தகுந்ததல்ல. கினிபுல் முதலானவற்றை நட்டுப் பயிர்செய்தால் கஷ்டமின்றி வேண்டியமட்டும் புல் சம்பாதி த்து வைத்துக்கொள்ளலாம். இந்தப் புல்லைத் தின்பதினால் கால்நடைகளுக்கு மிக்க பல முண்டாகும். ஆகையால் விசேஷமாய்ப் பயி ராகும் காலத்திலேயே இதை ஜாக்கிரதை செய்து வைத்துக்கொள்ளவேண்டும். கால் நடைகளை இப்படிப் பாதுகாத்து வருவதால் அவைகட்குப் பல மதிகரித்துக் குடியானவ னுக்கு விசேஷ லாபம் கிடைக்கும். ஆதலின் பால்கறக்கும் பசுக்களுக்கும் பாரமிழுக்கும் எருதுகளுக்கும் வெவ்வேறு காலத்தில் வெவ் வேறு ஆகாரங்களைக்கொடுத்துரக்ஷித்துவருவ தவசியம். குடியானவன் தன் சக்திக்கு மிஞ்சின மாடுகளை வைத்துக்கொள்ளக் கூடாது. பால்கறக்கும் பசுக்களுக்கு அதிக வெப்பமாவது அதிகம் குளிராவது பட்டால் அவை பலவீனமாய்விடும். அவைகளைத் தகுந்த தொழுவங்களில்கட்டிக்காப்பாற்றுவ தவசியம். பகலில் வெயில் அதிகமாகவிருக் கும் சமயத்தில், அவைகளைக் குளிர்ந்த நிழல் தரும் மாங்களி னடியில் கட்டவேண்டும். இரவில் தொழுவங்களில் குங்கிலியம், சாம் பிராணி முதலியவற்றை எருமுட்டையோடு சேர்த்துப் புகைபோட்டுக் கொசுப்பாதை யில்லாமல் செய்யவேண்டும். ஜனங்கள் குடி யிருக்கும் வீடுகளைப்போலவே மாட்டுத் தொழுவங்களும் சுத்தியாயிருக்கவேண்டும். மனிதர்கள் குடியிருக்கத்தகாத, வெயில், குளிர், காற்று, மழை, ஈரம், துர்நாற்றம் இப்பேர்ப்பட்ட அசௌக்கியமான பாதை களிலுள்ள கட்டுக் கோப்புகளில் கறவை மாடுகளைக் கட்டக்கூடாது. அப்படிச் செய் தால் பால் குறைந்துவிடும்.

4. பசுவுக்குக் கொடுக்கும் தீனி, அல்லது மேய்ச்சல் அதன் பாரத்தில் பத்தி லொரு பாக மிருக்கின் அப்பசு கொடுக்கும் பால் அதன் பாரத்தில் இருபதி லொருபாக மிருக் கும். இத்தேசத்தில் குடியானவர்கள் இப் படித் தீனி கொடுக்க அசக்தராயிருப்பதினால் பசுக்களில் அநேகங் குற்றங்களுண்டாகின் றன. அவைகளின் மேய்ச்சலைத் திடீரென மாற்றினால் அவைகளுக்கு நோயுண்டாகும். மாட்டுத் தொழுவங்களில் எப்போதும் இந் துப்புப் பாறையொன்று வைத்திருக்கவேண் டும். அப்பாறையைப் பசுக்கள் அடிக்கடி நக்கினால் அவைகளுக்கு நோய் வராமலிருக் கும். ஒவ்வொரு மாடு நிற்பதற்கும் தொழு வத்தில் 10 அடி நீளமும், 5 அடி அகல மும், 10 அடி உயரமுமுள்ள இடம் விட வேண்டும். இரத்தபேதி, கழுத்துப்புண் முத லான ஒட்டு வியாதிகள் மாடுகளுக்கு வரு வதுண்டு. அச்சமயங்களில் நோய்கண்ட மாடுகளைத் தனியே நீக்கிக் கட்டவேண்டி யது. அந்நோய் காணுங்காலத்தில் அதற்குத் தகுந்த சிகிச்சையையும் செய்யவேண்டும்.

5. சென்னை வேப்பேரியில் ஜீ. ஹி. நி. சங்கத்துக்காகப் பூரண தயாளகுணமுள்ள இராஜா வேணுகோபால பகதூரவர்களால் கட்டிவிடப்பட்டிருக்கிறஜந்துக்களின் வைத்தியசாலையில் ஜந்துக்களுக்குச் சம்பவிக்கும் பலவிதமான சுரங்கள், அஜீர்ணம், பலவீனம், பேதி, ஜலதோஷம், கன்றீனமாட்டாத வருத்தம், இருமல், காயங்கள், ரணங்கள் முதலான எல்லா நோய்களுக்கும் சிகிச்சை நடந்து வருகிறது. கவர்ன்மெண்ட் வெட்ரினெரிக் கலாசாலை என்னும் ஜந்து சாஸ்திர வித்தியாசாலையின் உபாத்தியாயர்களும், மாணுக்கர்களும் இவ்வைத்தியசாலைக்கு வரும் எல்லா ஜந்துக்களுக்கும் மிகச்சாமர்த்தியமாயும் அக்கரையுடனும் சிகிச்சை செய்கிறார்கள். மேஜிஸ்டிரேட்டுகளின் உத்தரவின்பேரில் அனுப்பப்படும் எல்லா ஜந்துக்களுக்கும் பணமின்றி இலவசமாகவே வைத்தியம் செய்யப்படுகிறது. மற்ற வெளியார் அனுப்பும் குதிரைகளுக்கு மாத்திரம்சொற்ப விலைக்கு மருந்துகள் கொடுக்கப்படும். சிகிச்சைக்கு வந்திருக்கிற பிராணிகளுக்குச் சொந்தக்காரர்கள் தீனி கொண்டுவந்து கொடுக்கலாம்; வைத்திய சாலையிலேயே தீனியும் கொடுக்கவேண்டுமானால் அதற்குப் பிடிக்கிற சொற்ப செலவைமாத்திரம் சொந்தக்காரர்களே கொடுக்கவேண்டும். சென்ற வருஷத்தில் மேஜிஸ்டிரேட்டுகளால் அனுப்பப்பட்ட ஜந்துக்கள் 72, மற்றவர்களனுப்பிய ஜந்துக்கள் 2,378. ஆக மொத்தம் 2,450 ஜந்துக்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டது. இந்த வைத்திய சாலையில் ரணவைத்தியர்களும், சிகிச்சோபசாரங்கள் செய்பவர்களும், மற்ற உதவியாட்களும் நியமிக்கப் பட்டிருக்கிறதுடன், சொற்பச் செலவில் குதிரைகளுக்கு அதிக ஜாக்கிரதையாய் லாடம் அடிக்கத் தகுந்த லாடக்காரர்களு மிருக்கிறார்கள். இவ்விதமாக ஏற்பட்டிருக்கிற ஒழுங்குபாடுகளை வெகு ஜனங்கள் இன்னுமறியாமல், அவைகளின் நன்மைகளை அடையாமலேயிருக்கிறார்கள். இனிமேலாகிலும் அந்நன்மைகளின் பயனை ஜனங்கள் விசேஷமாயடைந்து வரவேண்டுமெனக் கோருகின்றோம்.

ஆலோசனையில்லாத கொடுமை.

தகப்பன். — வத்ஸா, பக்ஷிகளின்பேரில் கற்க ளெறிந்துகொண் டிருந்த சிறுவர்களுடன் கலந்துகொண்டிருக்கும் உன்னைப் பார்ப்பதற்கு எனக்கு மிகவும் விசனமாக விருக்கிறது. அது குரூரமான விளையாட்டல்லவா?

குமாரன்.—நாயினு, சிறுவர்க ளெல்லாருமே பக்ஷிகளின்பேரில் கற்களெறிகிறார்கள். அவ்வாறு செய்வதனால் ஏதாவது தீங்குண்டா?

தகப்பன்.—நீ ஒரு சின்ன கப்பல் செய்திருக்கும்போது அதைப் பாழாக்க வேண்டுமென்று எவனுகிலும் ஒரு சிறுவன் வந்து தடியினாலாகிலும், கல்லினாலாகிலும் அதையுடைக்க நீ சம்மதப்படுவாயா? சம்மதப்படமாட்டாய். நீ கோபித்துக்கொள்ளமாட்டாயா?

குமாரன்.—நிஜமாகவே கோபித்துக்கொள்வேன். என் வஸ்துக்களை அவ்வாறு அழிக்க எந்தச் சிறுவனுக்கும் சுதந்தரமில்லை.

தகப்பன். — அது நிஜந்தான். சிறு பக்ஷிகளைக் கொல்ல உனக் கேதாகிலும் சுதந்தரமுண்டா? பக்ஷிகள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிறிய ஜந்துக்கள். தாம் சிருஷ்டித்த ஜீவ ஜந்துக்களின்பேரில் அவர் மிக்க பக்ஷமாயிருப்பார். நாமெல்லோரும் கேட்டுச் சந்தோஷிக்கும்படியான சங்கீத சாதனம் பக்ஷியின் கண்டத்தில் பொருந்தியிருப்பது உனக்குத் தெரியுமா?

குமாரன்.—பக்ஷியின் கண்டத்தில் சங்கீத சாதனமா விருக்கிறது? இதென்ன விந்தை! அப்பேர்ப்பட்டதை யார் கேட்டிருக்கிறார்கள்?

தகப்பன். — ஆம், பக்ஷியின் கண்டத்தில் புள்ளாங்குழல் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் பியானோவென்னும் வாத்தியப் பெட்டியைப்பார்க்கிலும் இனிமையான ஸ்வரங்களைப் பக்ஷி பாடக்கூடும்.

குமாரன். — பக்ஷிகளின் கண்டத்தில் புள்ளாங்குழலா விருக்கிறது? என்ன ஆச்சரியம்?

தகப்பன். — பக்ஷிகள் பாட்டு பாடும்படியாகப் புள்ளாங்குழலை யொத்த அவயவம் அவைகளின் கண்டங்களில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் கழுத்து சிறியதாயிருந்தபோதிலும் சங்கீதம் பாடும் குழல் வெகு நுட்பமாய்ச் சிருஷ்டிக்

கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு ஆகாரம் உட்கொள்ளுவதற்கும், சுவாசம் விடுவதற்கும் சற்றேனும் தடங்கலில்லாம லிருக்கும்படி அச்சங்கீத சாதனம் அவைகளின் கண்டங்களில் சுலபமாய்ச் சரிபடுத்திக்கொள்ளும்படி கடவுளால் ஆச்சரியமா யுண்டாக்கப்பட்டிருக்கிறது.

குமாரன்.—ஆனால் இது மிகவும் விசித்திரமாகத்தா னிருக்கிறது. நான் ஒருமாத காலமாகப் பக்ஷிகளின் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருந்தும், நான் இதைக்குறித்துக் கவனித்தவனல்ல.

தகப்பன். — பக்ஷிகளின் எலும்புகளையும், இல்களையும் கடவுள் அதி சூட்சமமாக உண்டாக்கியிருக்கிறார். அவைகளி னவயவங்களினுள்ளே ஓர் எந்திரம் பொருந்தியிருக்கிறது.

குமாரன்.—எந்திரமா!

தகப்பன்.—ஆம், அவைகள் தின்னு மாகாரத்தை மெல்லியதாக உடைத்து, அதை ரத்தமாக மாற்றும்படியான எந்திரம் அவைகளின் சிறிய வயிற்றிலிருக்கிறது. அவைகளுக்கு நரம்புகளுங்கூட விருக்கின்றன.

குமாரன்.—நரம்புகளென்று லென்ன?

தகப்பன். — நமக்கு எதனால் உணர்ச்சி தெரிகிறதோ அதற்கு நரம்பு என்று பெயர். வாயின் நரம்புகளால் ருசி தெரியவருகிறது. காதின் நரம்புகளால் நாம் கேட்கிறோம். நாசியின் நரம்புகளால் நமக்கு வாசனை தெரிகிறது. கண்களின் நரம்புகளால் நாம் காண்கிறோம். நம் தேகமெல்லாம் பரவியிருக்கும் நரம்புகளால் நமக்கு உணர்ச்சி தெரிகிறது. நமக்கு நரம்புக ளிருப்பதைப்போல் பக்ஷிகளுக்கும் நரம்புக ளிருக்கின்றன. மேலும் அவைகளின் சிறிய தேகங்களில் மாமிச கண்டங்களும் பொருந்தியிருக்கின்றன.

குமாரன்.—இராமன் தன் இரண்டு பக்ஷிகளையும் என்னசெய்கிறா னென்பது, அவைகளுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்.

தகப்பன்.—கடவுள் சிறிய பக்ஷிகளினிடத்திலும் பிரியமாயிருக்கிறாரென்று உனக்குத் தெரியாதா? நல்ல வெயிலிலும், நிழலிலும் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் சந்தோஷமாக விருக்கும் நூற்றுக்கணக்கான பக்ஷிகளிருக்கும் வனங்களுக்கும் வயல்களுக்கும் சென்று அவைகளைக் கொல்ல ஆசையுள்ள சிறுவர்களைக் குறித்து அவர் என்ன நினைப்பாரென்று உனக்குத் தோன்றுகிறது?

குமாரன்.—கடவுள் பக்ஷிகள்பேரில் இவ்வளவு பிரியமாக விருக்கிறாரென்று எனக்கு இதுவரையில் தோன்றவில்லை.

தகப்பன்.—இது எப்பொழுதும் இப்படியே. ஏனென்றால் சிறுவர்கள் குரூரமான வேலைகளைத் தாங்கள் செய்யும்போது அதைப் பற்றி யோசனை செய்கிறதேயில்லை. ஆகையால் கடவுள் உன்னைச் சிருஷ்டித்தபடி பக்ஷிகளையும் சிருஷ்டித்து அவர் உன்னை ஜாக்கிரதையாகப் பார்க்கிறதைப்போல் அவைகளையும் பார்க்கிறாரென்று ஞாபகம் வைக்கவேண்டும்.

தவளைகளுக்குக் குறும்பு செய்தல்.

சில பயல்கள் ஒரு குளத்தண்டை கூடிக் கற்களைத் தண்ணீர்மேல் சறுக்கியோடும்படி விட்டெறிந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதிலிருந்த தவளைகள் பயந்து கல்லுக்குத் தப்பும்பொருட்டு இங்குமங்கும் முழுகி ஒளிக்கப் பார்த்தன. ஆனால் ஒன்றின்பின் ஒன்றாய் அநேகம் கற்கள் மேலும் மேலும் வந்துவிழவே, சில தவளைகளுக்குக் காயம்பட்டது. சில செத்துப்போயின. அப்போது அவற்றுள் தைரியமுள்ள தவளை ஒன்று தன் தலையைத் தண்ணீர்க்குமேல் கிளப்பிக்கொண்டு, "அன்பான பிள்ளைகளே, இவ்வளவு பாலியத்தில்தானே ஏன் கொடுமை செய்யப் பழகுகிறீர்கள், இந்தக் கல்லெறி விளையாட்டு உங்களுக்கு ஆநந்தமாயிருந்தாலும் எங்களுக்கு அபாயமும் மாணமுமாக இருக்கிறதே; இது அநியாயமல்லவா?" என்றது. ஆகையால் விளையாட்டு வேளையிலேயும் மற்றவர்களுக்குக் கெடுதி யுண்டாகாமல் விளையாடுவது நலம்.

குதிரைகளுக்குச் சர்க்கரையுணவினாலுண்டாகும் பிரயோஜனம்.

குதிரைகட்கும், கோவேறு கழுதைகட்கும், சர்க்கரை அல்லது வெல்லப்பாகை ஆகாரமாகக் கொடுப்பது நம்மவர்களி லநேகருக்குத் தெரியாது. சர்க்கரை உணவைக் குதிரைகட்குக் கொடுக்கும் விவரத்தையும் அதனாலுண்டாகும் நன்மைகளையும் இவ்விந்தியாவில் குதிரை சிகிச்சை இலாகா முக்

கிய உத்தியோகஸ்தரான கர்னல். ஜே. ஏ. நன் துரையவர்கள் எடுத்துக் காட்டியிருப் பதை இங்கு விவரிக்கின்றோம்:—

"இந்தியாவின் அநேக பாகங்களில் கரும் பாலைகள் வைத்து ஏராளமான சர்க்கரை யுற் பத்தி செய்யப்படுவதால், வெல்லமும் சர்க் கரையும் மலிவாய்க் கிடைக்கின்றன. அப்ப டிப்பட்ட சர்க்கரை யுற்பத்தி செய்யுமிடங் களில் சர்க்கரையைச் சுத்தி செய்வதனால் விசேஷமான வெல்லப்பாகு கிடைக்கின்றது. இந்த வெல்லப்பாகை விசேஷமாக ஐரோப் பா, அமெரிக்கா கண்டங்களிலுள்ள ஜனங் கள் தங்கள் கால்நடைகளுக்கு ஆகாரமாகக் கொடுத்து வருகிறார்கள். சர்க்கரை செய் வதில் கிடைக்கும் எல்லா வஸ்துக்களையும் சாதாரணமாகக் கால்நடைகளுக் குணவாகக் கொடுத்தால் அவைகளுக்குக் கொழுப்பு அதிகரிக்குமென எண்ணுகிறார்கள். பிரா ன்சு தேசத்தில் குதிரைகளுக் கிந்த உணவைக் கொடுத்துவந்ததில் சில நாட்களுக்குள்ளாக அவைகள் நன்றாய்ச் செழித்து வளர்ந்து அதிக பலனுள்ளவைகளாய் அபாரமான வே லைகளைத் தாங்கிச் செய்துவந்ததாகவும் நிரூ பிக்கப்பட்டிருக்கிறது. பாரிஸ் பட்டணத் தில் ஜெனரல் ஆம்னிபஸ் கம்பெனியார் குதி ரைகட்கு வெல்லப்பாகைக் கிரமமாகக் கொ டுத்துக்கொண்டு வருகிறார்கள். அதன்றி யும், அத்தேசத்துச் சைனியத்திலுள்ள குதி ரைகளில் தொலைதூரத்துச் சவாரிக்கென நிய மிக்கப்பட்டிருக்கும் குதிரைகளுக்குச் சர்க் கரையைக் கொடுத்துப் பழக்கப்படுத்துகி றார்கள்; சில சந்தர்ப்பங்களில் பிரதி குதிரை க்கும் நாளொன்றுக்கு 6 முதல் 8 அவுன்ஸ் வரை வெல்லப்பாகைச் சாதாரண ஆகா ரத்துடன் சேர்த்துக் கொடுக்கிறார்கள்.

கியூபாதேசத்தில் அமெரிக்காவின் சைனி யத்தார் யுத்தம் நடத்திவந்தகாலத்தில் குதி ரைகளுக்கு அவைகளின் ஆகாரத்தோடு வெல்லப்பாகைக் கலந்து கொடுத்துவந்தார் கள். குதிரைகட்குத் தானிய உணவு கிடை க்காத காலத்தில் வெல்லப்பாகில் நனைத்த புல்லைக் கொடுத்துக் காலத்தைக் கழித்தனர். சாதாரணமாக ஒன்று அல்லது இரண்டு குதி ரைகட்கு அதிகப்படாமல் நம்மிடம் இருக் குமேயாகில் சர்க்கரை அல்லது வெல்லப்பா கை நம் கைகளினாலேயே அவைகளுக்கு உண் பிக்கலாம். அப்படிக்கின்றி அதிகமான ஜந் துக்களை வைத்திருந்து இவ்வாறான உணவா திகளால் அவைகளைப் போஷிக்கக் கருதி னால் அமெரிக்கா தேசத்தவர்கள் தங்களு டைய குதிரைகட்குப் புற்களோடு வெல்லப் பாகைச் சேர்த் துபயோகிப்பதைப்போல் நா மும் உபயோகிக்க முயலவேண்டும். அஃ தெப்படியெனில், தேவையான வெல்லப்பா கை ஒரு கோணியில் கட்டி அக்கோணி மூட் டையைத் தண்ணீர் நிரம்பிய ஒரு தொட்டி யில் ஒரு இராத்திரி முழுமையும் ஊறவைத்தி ருந்து, மறுநாள் காலையில் குதிரைகளின் ஆகா ரமாகிய புல்லை ஒரு பாய் அல்லது கோணிக் கித்தான்பேரில் இலேசாகப் பரப்பி, அதன் பேரில் சித்தப்படுத்தியிருக்கும் பாகு கரைந் துள்ள நீரை அப்புல் நனையும்படி தெளித்து அது சற்று ஊறினபின் அதை வெயிலில் கா யவைக்கவேண்டும். இவ்வாறே தேவையான புல்லிற்குப் பாகு கரைந்த நீரை ஊற்றி உலர் த்தி வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் ஒவ்வொரு புல்லும் பாகினால் பூசப்பட்டவைக ளாகின்றன. இதன்றியும் புல்லானது குதிரைகள் தின்னத் தகுதியற்ற தாயிருந்தபோதிலும், பாகின் சம்பந்தத்தால் குதிரைகள் அதை அதிகப் பிரீதியோடு தின் னும். ஆதலால் நன்றாயில்லாத புல்லையும் குதிரைகளுக் குபயோகிக்க நேரிடும்பட்சத் தில் மேலெழுதியபிரகாரம் அமெரிக்கர்களை ப்போல் புல்லைப் பாகினால் பதப்படுத்தி யுப யோகிப்பதே நன்று.

ஆஸ்திரியா தேசத்தின் சைனியத்தில் கஷ் டப்பட்டுப் பலவீனமாய்விட்ட குதிரை களுக்கும் அவைகளின் ஆகாரத்தோடு வெல் லப்பாகைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார் கள். ஆதலால் குதிரைகளுக்குக் கொடுக் கப்படும் தானிய உணவுக்குப் பதிலாய்ச் சர்க்கரை சம்பந்தமான எந்த உணவையும் தாராளமாகக் கொடுக்கலாமென்று நிதரிச னப் படுவதால் குதிரைகட்குச் சர்க்கரை யுணவே சிரேஷ்டமெனக் கருதப்படுகிறது. ஒருக்கால் சர்க்கரையே அதிக மலிவாய்க் கிடைக்குமாயின், அதை அவற்றினாகாரத் துடன் சேர்த்துக் கொடுக்கலாம். இந்தியா வின் சில பிரதேசங்களில் சர்க்கரை மலி வாய்க் கிடைத்த போதிலும் சிற்சில விடங் களில் விலை அதிகமாக விற்கப்படுகிறதாகை யால் குதிரைகளின் ஆகாரமாகிய புற்களை மேலெழுதிய அமெரிக்கர் செய் முறைப்படி

வெல்லப்பாகு நீரில் பதப்படுத்தி உபயோகப்படுத்திக்கொண்டு வந்தால் இரண்டு வாரத்திற்குள் அதிக பலவீனமான குதிரைகளும் திடம் பொருந்தி நெடுநாள் வேலைசெய்யச் சக்தியுள்ளவைகளாய்விடும்.

மலையாளத்தில் காட்டுமிருகங்களைப் பாதுகாத்தல்.

இந்தியாவின் தெற்கே, மலையாள ஜில்லாவில் நிலம்பூர் என்னும் மலைக்காடுகள் மிருகங்களை வேட்டையாடுவதற்குத் தகுதியான விடம். இக்காடானது குதிரை லாடத்தைப் போல் வளைந்திருக்கும் ஓர் பள்ளத்தாக்கு. இக்காட்டைச் சுற்றிலும் மலைகளிருப்பதால் காட்டு மிருகங்கள் ஏராளமாக வசிப்பதற்கு அவ்விடம் அநுகூலமாக விருக்கிறது. உஷ்ணகாலங்களில் இக்காடானது ஊற்றுநீர் கொண்டிருக்கும். இக்காட்டிலிருக்கும் ஆமா (காட்டுப்பசு) என்னும் மிருகங்களும், எருதுகளும், கலைமான்களும், புள்ளிமான்களும் ஏராளமாக வேட்டையாடப்படுகின்றன. இப்பொழுது அக்காட்டைச் சுற்றிலும் சில ரப்பர் தோட்டங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்த ரப்பர் தோட்டங்களில் சுமார் 300 கூலியாட்களுக்கு அதிகமாகவே வேலை செய்து வருகிறார்கள். இத்தோட்டங்களை மேற்பார்வையிடும் துரைமார்க ளநேகர் அவ்விடத்திலேயே வீடுகள் கட்டிக்கொண்டிருப்பதால் அவர்களும் மேற்படி நிலம்பூர்க் காட்டில் வேட்டையாடி வருவார்களென்றும், இவ்வாறு எல்லாரும் வேட்டையாடினால் காட்டிலுள்ள மிருகங்கள் சீக்கிரம் ஒழிந்துவிடுமென்றும் இதற்காகச் சில நிபந்தனைகள் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் மலையாளம் கலெக்டர் ரெவினியூ போர்டுக்குத் தெரிவித்துள்ளார். கடைசியாகச் சென்னைக் கவர்ன்மெண்டார் இவைகளை யோசித்து, நிலம்பூரிலும், புதிதாகிய அமராம்பள்ள மென்னும் காட்டிலும் ஒவ்வொரு லைசென்ஸ் பெற்றவரும் பிரதி வேட்டைக் காலத்தில் ஆமா என்னும் மிருக மொன்றையும், 4 கலைமான்களையும், 2 புள்ளிமான்களையும் மாத்திரம் சுடலாமென்றும், காட்டில்போய் வேட்டையாடுவதற்கென்று கட்டிவந்த 10-ரூபாய் வரியை மாற்றி இனிமேல் 20 ரூபாய் வரிகட்டவேண்டுமென்றும் தீர்மானித்துவிட்டார்கள்.

வியக்கத் தகுந்த ஒரு கழுதை.

ஜந்து வர்த்தமான ஸார பத்திராதிபருக்கு.

ஐயா,

திருச்சினாப்பள்ளியிலிருக்கும்ஸெயின்ட் ஜான் வெஸ்ட்ரி என்னும் பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாய ரொருவர், சில நாட்களுக்குமுன் குன்னூரில் ஒரு பங்களாவில் குடியிருந்தபோது, ஒரு கழுதையை வாங்கி அங்குச் சிலநாள் வளர்த்துத் திருச்சினாப்பள்ளிக்குக் கொண்டுவந்து அதனை வெகு பட்சத்துடன் வளர்த்துவந்தார். இக்கழுதையினிடம் அவ்வுபாத்தியாயரின் பிள்ளைகளும் மற்று முள்ளோர்களும் மிகப் பட்சம் பாராட்டி வந்தார்கள். உபாத்தியாயரின் குழந்தைகள் இக்கழுதையைப் பிரதிதினமும் ஒரு சிறுவண்டியில் பூட்டி அவ்வண்டியில் குழந்தைகள் ஏறிக்கொண்டு சவாரிசெய்வது வழக்கம். இதனால் இக்கழுதையும் அப்பிள்ளைகளை விடாது பின்பற்றிக்கொண்டே திரியும். இப்படியிருக்கையில் உபாத்தியாயர் தன் கோடைக்கால விடுமுறை ஓய்வுநாட்களைக் கழிக்கும் நிமித்தம், குடும்பத்துடன் குன்னூருக்குப் போய்விட்டார். அவர்கள் போகும்போது கழுதையைமாத்திரம் திருச்சினாப்பள்ளியிலேயே விட்டுப் போய்விட்டார்கள். இதனால் கழுதை தன் மேல் பிரியம் காட்டிவந்த குழந்தைகளைக் காணாது அதிக ஏக்கமுற்று, உடனே யாருக்கும் தெரியாமல் திருச்சினாப்பள்ளியை விட்டு நீங்கிக் கால்நடையாகவே குன்னூருக்குப் பிரயாணமாய்விட்டது. கழுதை காணாது போய்விட்ட சேதி குன்னூரிலிருக்கும் உபாத்தியாயருக்குத் தெரியவே, அவரும் அவர் குடும்பத்தைச் சேர்ந்த யாவரும் விசனமடைந்து அந்தச் சங்கதியைப் போலீஸுக்கு அறிவித்தார்கள். இப்படியிருக்க ஒருநாள், அக்கழுதை குன்னூரில் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் சிலநாட்களுக்கு முன் வசிக்கப்போயிருக்கும் தன் எஜமானன் முன் தன்னை வளர்த்துவந்த பங்களாவின் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருந்தது. இதனை உபாத்தியாயரின் மனைவி கண்டுபிடித்துத் தன் புருஷன் பிள்ளைகள் முதலானவர்களுக்குக் காண்பிக்கவே அப்பிள்ளைகள் எல்லோரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். கழுதையின் புத்தி கூர்மையைப்

பார்த்தீர்களா! உலகில் கழுதையை மூடஜந்துவென்று சொல்வார்களே யொழிய அது அவ்வளவு நுட்ப அறிவினையுடைய ஜந்துவென்று யாரும் சொல்லவில்லை யல்லவா? அது தவறு. பட்சம் பாராட்டப்பட்ட எந்தப் பிராணியும் அறிவிற் சிறந்ததாகவே இருக்கும். பூ. மு. பார்த்தசாரதிநாயுடு.

சமாச்சாரக் குறிப்புகள்.

1. பந்தயக் குதிரைகளின் காட்சி. — சென்ற ஜூன்மீ 18உ காலை மைசூரில் போலோ என்னும் ஓர்விதப் பந்தய விளையாட்டில் நன்றாய்த் தேர்ந்த சில மட்டக்குதிரைகளின் காட்சி நடைபெற்றது. இக்காட்சிக்குச் சுமார் 200 மட்டக்குதிரைகள் வந்திருந்தன. அங்கு வந்திருந்த குதிரைகள் சுமார் 3 லக்ஷம் ரூபாய் மதிப்புடையதாயிருந்தன. இக்காட்சியில் காண்பிக்கப்பட்ட அக்குதிரைகள் அரபி, வேலர் என்னும் ஜாதிகளைச் சேர்ந்ததாகவு மிருந்தன. அவைகளில் வெகு நேர்த்தியான குதிரைகளுக்கு வெகுமதிக ளளிக்கப்பட்டன.

2. பசு வைத்திய சங்கிரகம். — மைசூர் மாகாணத்தில் கால்நடைகளின் வியாதிகளுக்கு இன்ஸ்பெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ, நரசிம்ம ஐயங்காரவர்கள் 1895-ம் வருஷத்தில் "பசு வைத்திய சங்கிரகம்" என்னும் கிரந்தத்தைக் கன்னடத்தில் பிரசுரம் செய்தனர். இப்போது மேற்படி நூலை அவர் சீர்திருத்தி இரண்டாவது பதிப்புக்குத் தயார் செய்து வைத்துக்கொண்டிருக்கிறார். மைசூர் பெரிய ஸர்ஜன் துரையவர்களும், வித்தியாப்பியாச இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களும் அதைப் பார்வையிட்டுப் பயிரிடும் குடித்தனக்காரர்களுக்குக் கால்நடைகளின் சாமான்னிய வியாதிகளின் சுபாவத்தையும், அவைகளுக்குச் செய்யவேண்டிய சிகிச்சையையும், அவ்வியாதிகள் வராமல் தடுக்கச் செய்யவேண்டிய காரியங்களையும் அறிவிக்க, மேற்கண்ட நூல் உபயோகப்படுமென்று மைசூர்க் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்திருப்பதால், அக்கவர்ன்மெண்டார் அதை 2,000 பிரதிகளாகப் பதிப்பித்துப் பிரதி யொன்றுக்கு விலை அணா 8 ஆகக் குடியானவர்களுக்கு விற்பனை செய்யும்படி யேற்பாடு செய்ய ரெவினியூ கமிஷனரவர்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

3. சென்னைப் பஞ்சரபோல். — மூப்பினாலும் வியாதியினாலும் வேலைசெய்யச் சக்தியற்ற ஜந்துக்களுக்காகச் சென்ற வருடத்தில் சென்னைக் கொண்ணூர் ரோட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஆசிரயத்திற்குச் சென்ற மாதம் 5-ம் தேதி யன்று மாலை மாட்சிமை தங்கிய விஜயநகரம் மகாராஜகுமாரிகா சாஹேபா அவர்கள் விஜயம் செய்து, அவ்விடத்திலிருக்கும் ஜந்துக்களை யெல்லாம் கவனித்துப் பார்த்து, அவைகளின் சுகாசுகங்களைப்பற்றி மிகவும் அன்பாவலுடன் விசாரித்தார்கள். அவ்வம்மையார் தாம் பார்த்தவையாயும் மிகத் திருப்திகரமாகவிருக்கின்றதெனக் கூறினர். பின்னர், தாம் அவ்விடம் விட்டுச் செல்வதற்குமுன், இவ்வாசிரயத்தை ஏற்படுத்த முயற்சிகள் பலவும் செய்தவரும், சிலநாட்களுக்கு முன் காலஞ்சென்றவருமான ஜட்ஜ் பாடெம்துரையவர்களின் உருவப்படமொன்று தாம் கொடுப்பதாகவும், அதனை இந்தப் பஞ்சரபோல் ஆபீஸில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டுமென்றும் சொல்லிப்போயினர்.

4. புதிய ஐக்கோர்ட் ஜட்ஜ். — காலஞ்சென்ற சென்னை ஐக்கோர்ட் ஜட்ஜ் எச். டி. பாடெம் துரையவர்கட்குப் பதிலாகக் கல்கத்தாவில் பாரிஸ்டராக விருக்கும் மிஸ்டர் அப்துல் ரகீம், எம். ஏ., அவர்கள் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். இவர் மகம்மதியராகையால், ஜட்ஜ் பாடெம் துரையவர்களுக்குச் சென்னை மகமதிய சங்கத்தார் மீதும் அவர்கள் சங்கத்தின் மீதும் இருந்த மதிப்பும் பிரியமுமிருந்து சங்கத்தைச் சரிவர நடத்திவர வேண்டுமென்று மகமதிய சங்கத்தார் தங்கள் மங்கள வாழ்த்துச் சொற்களைத் தந்தி மூலமாக வனுப்ப, அதற்குப் பதிலாகச் சாஹிப் அவர்களும், தம்மை வாழ்த்தினதற்காகத் தாம் மிகவும் சந்தோஷிக்கிறதாகவும், ஜட்ஜ் பாடெம் துரையவர்கள் இச்சங்கத்தின் விஷயமாக நடந்துகொண்டபடித் தாமும் தம்மால் கூடியமட்டும் நடந்துகொள்வதாகவும் பதில் அனுப்பினர்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908